RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 223 | ஆகஸ்டு.15 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







## ஆர்டிஐ பதில்கள் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும்: அதிகாரிகளுக்கு மாநில தகவல் ஆணையர் உத்தரவு




ஊட்டி: ஆக.15-

நீலகிரி மாவட்டத்தில் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பாக அனைத்துத் துறை அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் ஊட்டியில் உள்ள ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா முன்னிலை வகித்தார். மாநில தகவல் ஆணையர்கள் பிரியகுமார், இளம்பரிதி, நடேசன் தலைமை வகித்தனர்.

முகாமில் தமிழ்நாடு தகவல் அறியும் உரிமை சட்ட தகவல் ஆணையர் பிரியகுமார் பேசியதாவது: தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து பொதுமக்களிடையே அதிக அளவில் விழிப்புணர்வு உள்ளது. முன்பு குறைவான அளவு மனுக்கள் மட்டுமே இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டன. தற்போது பல்வேறு துறைகளிலிருந்து அதிக அளவில் மனுக்கள் பெறப்படுகின்றன.

மனுதாரர்களிடம் இருந்து வரும் மனுக்கள் மீது உடனடியாக விசாரணை மேற்கொள்ளுமாறு பொது தகவல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட காலத்துக்குள் மனுக்கள் மீது பதில் அளிக்காத பொது தகவல் அதிகாரிகள் மீது நடடிக்கை மேற்கொள்ளவும், சட்டத்தில் வழிவகை உள்ளது.

எனவே மனுதாரர் அளிக்கும் மனுவை நன்றாக படித்து சரியான பதிலை மனுதாரருக்கு 30 நாட்களுக்குள் தர வேண்டும். நீங்கள் அளிக்கும் பதில்கள் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கணவர் கைது எதிரொலி: மதுரை மேயர் இந்திராணி பதவிக்கு நெருக்கடி!



மதுரை, ஆக.15-

சொத்து வரி முறைகேடு வழக்கில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளதால், சட்ட சிக்கல் காரணமாக பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நெருக்கடிக்கு மேயர் இந்திராணி உள்ளாகியுள்ளார்.

மதுரை மாநகராட்சி சொத்துவரி முறைகேடு வழக்கில் திடீர் திருப்பமாக திமுக மேயர் இந்திராணியின் கணவர் பொன்வசந்த் கைதாகியுள்ளார். கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திராணி மேயராக இருந்தாலும், இதற்கு முன்பு அரசியலில் இல்லை. இதனால் தனது கணவர் வழிகாட்டுதலோடு மாநகராட்சி நிர்வாகத்தை நடத்தி வந்தார். கட்சி ரீதியாக பொன். வசந்த் திமுகவிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டார். இதனால் மாநகராட்சி நிர்வாகத்தில் நேரடியாக தலையிட முடியாத சூழல் நிலவியது. எனினும், இந்திராணி மேயராக பணியை தொடர்ந்தார்.

தற்போது பொன்வசந்த் கைதானதால், தொடர்ந்து மேயராக செயல்படுவதில் இந்திராணி பல்வேறு சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. தனிநபராக மாநகராட்சி நிர்வாகத்தையும், அரசியல் அனுபவம் கொண்ட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், மூத்த கவுன்சிலர்கள், மாநகர கட்சி நிர்வாகிகளை அவர் எதிர்கொள்வது சிரமம். அவர் தனிப்பட்ட முறையில் யாரிடமும் பெரிய அளவில் தொடர்பில் இல்லாததால், அடுத்து என்ன முடிவெடுப்பது, யாரை நம்புவது, எப்படி செயல்படுவது என செய்வதறியாமல் தவித்து வருகிறார்.

இது குறித்து திமுக நிர்வாகிகள் கூறியதாவது: பொன் வசந்த் சொத்துவரி முறைகேடு உள்ளிட்டவற்றில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுவதால், அதற்கு மேயர் இந்திராணியும் பொறுப்பாவார். மத்திய குற்றப் பிரிவு போலீஸார் மேயர் இந்திராணியையும் அழைத்து விசாரிக்கலாம். ஏற்கெனவே மண்டலத் தலைவர்கள் ராஜினாமா, 19 ஊழியர்கள் சஸ்பெண்ட், 17 பேர் கைது போன்ற நடவடிக்கைகளால் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. தற்போது மேயரின் கணவரும் கைதாகியுள்ளதால், அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் மேயர் இந்திராணி பெயரைப் பயன்படுத்தி நடந்துள்ளதாகத்தான் கருதப்படும்.

இந்நிலையில், இந்திராணியே மேயராக தொடரும்பட்சத்தில் வழக்கு விசாரணையின் நம்பகத்தன்மையில் சந்தேகம் ஏற்படக்கூடும். ஆவணங்கள், ஆதாரங்கள், சாட்சிகளைப் பாதுகாப்பதில் சட்ட சிக்கல் ஏற்படும். அதனால், பொன்வசந்த் வழக்கு விசாரணையை நேர்மையான முறையில் எதிர்கொள்ள ஏதுவாக, இந்திராணியை மேயர் பதவியில் இருந்து கட்சித் தலைமை நீக்க வாய்ப்புள்ளது. இல்லாவிடில் ராஜினாமா செய்யும்படி வலியுறுத்தலாம்.

ஏற்கெனவே மண்டலத் தலைவர்கள், 2 நிலைக்குழுத் தலைவர்கள் பதவி பறிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு பதிலாக புதியவர்களை நியமிப்பதில் திமுக மேலிடம் ஆர்வம் காட்டவில்லை. ஆனால், மேயர் பதவி விவகாரத்தில் அதேபோன்ற நிலையை கடைப்பிடிக்க முடியாது. மேயர் இந்திராணி பதவியை ராஜினாமா செய்து, அவருக்குப் பதில் புதிய மேயரை தேர்ந்தெடுக்காவிட்டால், துணை மேயராக உள்ள சிபிஎம் கட்சியைச் சேர்ந்த நாகராஜன்தான் பொறுப்பு மேயராக செயல்படுவார். அதற்கு உள்ளூர் திமுக நிர்வாகிகளும், கவுன்சிலர்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

மேயர் இந்திராணி பதவியை பறித்தால், புதிய மேயரை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். மேயர் பதவியை கைப்பற்ற கோஷ்டி, சமூகம் மற்றும் அரசியல் ரீதியாக திமுக கவுன்சிலர்களிடையே போட்டி ஏற்படும். அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், மாநகர திமுக மாவட்டச் செயலாளர் தளபதி ஆகியோர் தங்கள் ஆதரவாளர்களை கொண்டுவருவதில் காட்டும் ஆர்வத்தால் உட்கட்சி பூசல் அதிகரிக்கும். தேர்தல் நெருங்கும் சூழ்நிலையில், மேயர் பதவி விவகாரத்தில் குழப்பம்தான் தொடர்கிறது. இவ்வாறு கட்சியினர் தெரிவித்தனர்.

## தலைமைப் பண்பு இல்லாதவர் எடப்பாடி பழனிசாமி: ஓ.பி.எஸ். காட்டமான விமர்சனம்

சென்னை: ஆக.15-

தலைமைப் பண்பு இல்லாதவர் எடப்பாடி பழனிசாமி என ஒ.பி.எஸ். காட்டமான விமர்சித்துள்ளார். தலைமைப் பண்பு இல்லாத எடப்பாடி பழனிசாமிக்கு தோல்வி நிச்சயம். எடப்பாடியிடம் தலைமைப் பண்புக்கான அறிகுறி துளியும் இல்லாததால் அதிமுக தற்போது தொடர் தோல்வி அடைந்து வருகிறது. ஆணவம், கடுங்கோபம், இழிவான நடத்தை கொண்டவர்கள் தலைமைப் பதவிக்கு அருகதையற்றவர்கள் என விமர்சித்தார்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு முதல் ரூ.10 லட்சம் காப்பீடு வரை

## தமிழக அரசின் 6 அறிவிப்புகள்




சென்னை: ஆக.15-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக 6 சிறப்புத் திட்டங்களை நிறைவேற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

முன்னதாக, சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை முன்பு கடந்த 13 நாட்களாக போராட்டம் நடத்திவந்த தூய்மைப் பணியாளர்கள், அவர்களுக்கு ஆதரவாக போராடியவர்கள் என 600க்கும் மேற்பட்டோரை நள்ளிரவில் கைது செய்து, காவல் துறையினர் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். இந்தச் சம்பவத்துக்கு அதிமுக, சிபிஎம், தேமுதிக, தவெக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ள நிலையில், தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக 6 முடிவுகள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அறிவித்தார்.

அப்போது அவர், "தூய்மை பணியாளர்கள் மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் தனி கரிசனத்துடன் இருக்கிறார். தூய்மை பணியாளர்களின் நலனை காப்பதில் அரசு உறுதியாக உள்ளது.தூய்மை பணியாளர்களின் நலவாரியம் சிறப்பாக செயல்படுவதை அரசு உறுதி செய்துள்ளது." என்று கூறினார்.

அமைச்சர் வெளியிட்ட 6 அறிவிப்புகளின் விவரம் வருமாறு:1. தூய்மைப் பணியாளர்கள் குப்பைகளை கையாளும் போது அவர்களுக்கு நுரையீரல் மற்றும் தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இத்தகைய தொழில் சார் நோய்களை கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் தனித் திட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

2. தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்தால், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. அவர்களின் குடும்பங்களின் நலனையும், வாழ்வாதாரத்தையும் முழுமையாக உறுதி செய்யும் வகையில் இந்த நிதி உதவியுடன் கூடுதலாக ரூ.5 லட்சம் காப்பீடு இலவசமாக ஏற்படுத்தித் தரப்படும். இதனால், தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்தால் அவர்களின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு கிடைக்கும்.

3. தூய்மைப் பணியாளர்கள் அவர்களின் குடும்பத்தினரின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்திட, அவர்கள் சுய தொழில் தொடங்கும்போது அத்தொழில் திட்ட மதிப்பீட்டில் 35% தொகை அதிகபட்சமாக ரூ.3,50,000 மானியமாக வழங்கப்படும். கடனை திருப்பிச் செலுத்த ஏதுவாக 6% வட்டி மானியமும் வழங்கப்படும்.

4. தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்காக புதிய உயர்கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படும்.

5. நகர்ப்புறங்களில் சொந்த வீடு இல்லாத தூய்மைப் பணியாளர்களுக்கு, வரும் 3 ஆண்டுகளில், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் உதவியோடு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டங்கள் மூலம் 30 ஆயிரம் குடியிருப்புகள் கட்டித் தரப்படும். கிராமப்புறங்களில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீட்டில் தூய்மை பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

6. நகர்ப்புற தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த நகராட்சிகளின் மூலம் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதலில் சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு படிப்படியாக மற்ற நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

## செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உட்பட 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்: 27.63 லட்சம் குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி




சென்னை, ஆக.15-

ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டத்தை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்து தொடங்கி வைத்தார். துறை செயலாளர் ப.செந்தில்குமார், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌசிக், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் சித்ரா, நிலைக் குழுத் தலைவர் (சுகாதாரம்) கோ.சாந்தகுமாரி, இணை இயக்குநர் வினய், மாநகர நல அலுவலர் ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை: ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. 27.63 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். தமிழகத்தில் விருதுநகர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருச்சி, திருவாரூர், மதுரை, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களிலும், சென்னையில் 2 மண்டலங்களிலும் மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் கடந்த 2007ம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது.

இந்நிலையில், சென்னையில் இதர 13 மண்டலங்களிலும், புதிதாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தென்காசி, நாகப்பட்டினம், வேலூர் என மொத்தம் 7 மாவட்டங்களுக்கு இந்த திட்டம் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்தை சென்னை ஷெனாய் நகர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார்.

அப்போது, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நாடு தழுவிய தடுப்பூசி திட்டத்தில், 12 வகையான நோய் பாதிப்புகளை தடுப்பதற்கு 11 வகையான தடுப்பூசிகள் தமிழகத்தில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. அதில், மூளைக் காய்ச்சல் எனப்படும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் சில வகையான கியூலெக்ஸ் கொசுக்களால் பரவும் ஒரு வைரஸ் நோய். இது மத்தியநரம்பு மண்டலத்தை பாதித்து, கடுமையான சிக்கல்கள், வலி பாதிப்புகள், சில நேரங்களில் உயிரிழப்பையும் ஏற்படுத்துகிறது. இதில் உயிர் பிழைத்தவர்கள்கூட அதிக அளவில் நரம்பியல் விளைவுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

இயற்கை தொற்று காரணமாக எதிர்ப்பு சக்தி இல்லாத குழந்தைகளை கண்டறிந்து, அவர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களில் இந்த தடுப்பூசி போடப்படுகிறது. தற்போது தொடங்கப்பட்டுள்ள விரிவாக்கத் திட்டத்தில் 27.63 லட்சம் குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி ஒரு டோஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

515 வயது குழந்தைகளுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் (ஆக.13 முதல் செப். 12 வரை), 15 வயது குழந்தைகள், பள்ளியில் இருந்து இடைநிற்றலான குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும் (செப்.13 முதல் அக்.12 வரை), 115 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், சிறுவர் சீர்திருத்த பள்ளிகளிலும் (அக்.13 முதல் நவ.12 வரை) திங்கள், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் அதிகபட்சம் 12 நாட்கள் நடைபெறும் முகாம்களில் இலவசமாக தடுப்பூசி போடப்படும். விடுபட்ட குழந்தைகளுக்கு தனியாக ஒரு வாரம் தடுப்பூசி போடப்படும்.

இவ்வாறு அவர் கூறினார். சுகாதாரத் துறை செயலர் செந்தில்குமார், பொது சுகாதாரம், நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் சோமசுந்தரம், மருத்துவம், ஊரக நலப் பணிகள் இயக்குநர் சித்ரா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## 'நீதிமன்ற நடவடிக்கையில் தலையிட கூடாது' முன்னாள் நீதிபதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவருக்கு அபராதம்

சென்னை: ஆக.15-

உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் ஒருதலைப் பட்சமாக செயல்படுவதாக கூறி உயர் நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கறிஞரான வாஞ்சிநாதன், அவருக்கு எதிராக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு புகார் அனுப்பியிருந்தார். இதையடுத்து நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், கே. ராஜசேகர் அமர்வு, இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வாஞ்சிநாதனை நேரில் வரவழைத்து விசாரணை நடத்தியது.

இந்நிலையில், வாஞ்சிநாதனுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிடக் கோரி உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் சிலர் கூட்டாக அறிக்கை வெளியிட்டனர். இதையடுத்து, நீதிமன்றத்தின் அன்றாட நடவடிக்கைகளில் முன்னாள் நீதிபதிகள் தலையீடு செய்யக் கூடாது என தடை விதிக்க கோரி வாராகி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி சுந்தர் மோகன் அமர்வில் இந்த மனு மீதான விசாரணை நேற்று நடந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி ஆஜராகி வாதிட்டார். இதையடுத்து நீதிபதிகள், "நீதித்துறை சார்ந்த விவகாரங்களில் மனுதாரருக்கு என்ன சம்பந்தம் உள்ளது? இது போன்ற விஷயங்களில் மனுதாரர் தலையிடக் கூடாது" என்று எச்சரித்தனர். பின்னர், சுயவிளம்பரத்துக்காக இந்த வழக்கை தொடர்ந்துள்ளதாக கூறி, மனுதாரருக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம் விதித்து வழக்கை தள்ளுபடி செய்தனர்.




# வேலூரில், தமிழ்நாடு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அனைத்து ஓய்வூதியர் நல அமைப்பின் சார்பில் முதல் மாநில மாநாடு

வேலூர் ஆக.15-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர் மேற்கு பி.டி.எம் மஹாலில், தமிழ்நாடு பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி அனைத்து ஓய்வூதியர் நல அமைப்பின் சார்பில் முதல் மாநில மாநாடு, மாநில அமைப்பாளர் பா.ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில ஒருங்கிணைப்பு குழு தேவகுமார், வரவேற்புரை குழு தலைவர் எம். பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். மாநில தலைவர் நெ.இல.சீதரன் துவக்க உரையாற்றி சிறப்பித்தனர். மேலும், மாநில நிதி காப்பாளர் எஸ். கனகராஜ் மற்றும் மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கலந்துகொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர்.

இம்மாநாட்டில் 70 வயது முடித்த அனைவருக்கும் 10 சதமான ஓய்வூதிய உயர்வு வழங்கிட வேண்டுமென்றும், தொகுப்பூதிய மதிப்பு புதிய அவுட்சோர்சிங் ஊழியர்களையும் தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற 22 தீர்மானங்கள் முதல் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு மத்திய மாநில அரசு கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.





# வேங்கைவாசல் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்

வேங்கை வாசல் ஆக.15-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வேங்கை வாசல் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஏ .ஜே. ஜி.,மஹால் (ஆகஸ்ட் : 14) நடைபெற்றது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் முகாமை துவக்கி வைத்தார். வேங்கைவாசல் ஊராட்சி மன்ற தலைவர், ஜெயச்சந்திரன் அனைவரையும் வரவேற்று

பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுத்தார். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகளை அமைச்சர், மா சுப்பிரமணியன் வழங்கினார். நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், ச.அரவிந்த் ரமேஷ் மற்றும் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் , கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன் , ஊராட்சி செயலர், பார்த்திபன் உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் சமபந்தி சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.





■ கன்னியாகுமரி மாவட்ட போக்குவரத்து காவலர்களுக்கு ரெயின் கோட் (மழை பாதுகாப்பு கவசம்)வழங்கும் நிகழ்ச்சி நாகர்கோவில் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது,முதல் கட்டமாக 50க்கும் மேற்பட்ட போக்குவரத்து காவலர்களுக்கு ரெயின் கோட் வழங்கப்பட்டது,இதனை குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர்.ஸ்டாலின் வழங்கினார்,இதில் நாகர்கோவில் சரக போக்குவரத்து காவல் ஆய்வாளர் வில்லியம் பெஞ்சமின் மற்றும் போக்குவரத்து காவலர்கள் கலந்துகொண்டனர்.

# தென்காசியில் 78 ஆவது சுதந்திர தின விழா மாணவ மாணவிகளுடன் கொண்டாடிய சமூக ஆர்வலர் அருணாச்சலம்

தென்காசி, ஆக.15-

தென்காசி மாவட்டம் கீழப்பாவூரைச் சார்ந்தவர் பி. கே.ஆர் அருணாசலம் ஆவார் இவர் பெருந்தலைவர் காமராஜர் கழகம் என்ற ஒரு கட்சியை உருவாக்கி நிறுவனத் தலைவராக கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வருகிறார் இவரது சிறு வயது முதல் சமூக ஆர்வலராக குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு உணவு உடை மருத்துவச் செலவுகளை தொண்டு நிறுவனம் மூலம் செய்து வந்தார் அதன் பலனாக பெருந்தலைவர் காமராஜர் கழகம் என்ற ஒரு கட்சியை உருவாக்கினார் இதில் ஏராளமான தொண்டர்கள் உள்ளனர் இவரது முக்கிய பணியே அரசியல் என்பது இரண்டாவது முதலில் தன்னைச் சுற்றியுள்ள கிராமங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அதிகாரிகள் முதல் அமைச்சர் வரை நேரில் சந்தித்து பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது உள்ளூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் வரை மனுக்கள் கொடுத்தும் அந்தப் பகுதி பிரச்சனைகளை தீர்த்து வைப்பதே முதல் கடமையாக கொண்டு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொண்டு நிறுவனத்தின் மூலமாகவும் அதன் பின் பெருந்தலைவர் காமராஜர் கழகம் என்ற அமைப்பின் மூலமாகவும் செய்து கொடுத்து வருகிறார் கீழப்பாவூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அனைத்து துப்புரவு பணியாளர்களையும் அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு நேரில் சென்று காலை நேரத்தில் சிற்றுண்டி மற்றும் டீ செலவுக்காகவும் மதிய வேலைகளில் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்து வருவார் மாற்றுத்திறனாளிகள் பள்ளி செல்லா குழந்தைகள் அவர்களை நேரில் சந்தித்து அவர்கள் குடும்பம் வறுமையில் உள்ளதை அறிந்து அதற்கு தேவையான சிறு சிறு உதவிகளையும் செய்து வருவார் குடும்பத்தின் எதிர்பார்ப்புகள் அதிகமாக






இருப்பின் டிரஸ்ட் மூலம் நல் உள்ளம் படைத்தவர்கள் மூலமாக கிடைத்த பணத்தைக் கொண்டு தன் சொந்த பணத்தையும் கொடுத்து துயர் துடைப்பார் தெருக்களில் மற்றும் கிராமப்புற பேருந்து நிலையங்களிலும் படுத்திருக்கும் மாற்றுத்திறனாளிகள் யாசகம் எடுப்போருக்கு புது துணி மற்றும் உதவிகள் செய்து வருவார் இந்நிலையில் கீழப்பாவூரில் அமைந்துள்ள இந்து நடுநிலைப் பள்ளியில் நடைபெறும் 78வது சுதந்திரத் திருநாளை முன்னிட்டு பள்ளியில் பயிலும் சுமார் 120 மாணவ மாணவிகளுக்கு தேசியக்கொடி வாங்கி இனிப்பு வழங்கியும் சுதந்திர தினத்தை கொண்டாட உற்சாகமூட்டினார் மேலும் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தேச தலைவர்களின் தியாகங்களை எடுத்துரைத்து கல்வி ஒன்று தான் நமது ஆயுதம்... கல்வி இல்லையேல் நாம் கல் சிலை தான் என்பதை உணர்ந்து பெற்றோர்கள் சொல் கேட்டும்ஆசிரியரின் அறிவுரையை ஏற்று மாணவ செல்வங்கள் வழி நடக்க வேண்டும் பள்ளி செல்லா குழந்தைகளை அடையாளம் கண்டு பள்ளி ஆசிரியர்களிடத்திலும் சமூக ஆர்வலர்களிடமும் தகவல் தெரிவித்தால் அவர்களின் குடும்ப சூழ்நிலையை அறிந்து அவர்களுக்கு கல்லூரி கல்வி வரை இலவசமாக கிடைத்திட அனைத்து நடவடிக்கையும் செய்து தர தாமும் நமது அரசாங்கமும் தயாராக உள்ளது என்பதை மாணவர்களுடன் கூறி உங்கள் வீட்டு அருகில் அப்படி ஏதாவது குழந்தைகள் இருப்பின் பள்ளியில் ஆசிரியர்களிடமும் அல்லது என்னிடமோ தகவல் சொல்லுங்கள் என்று கூறிமாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கி சுதந்திர தின விழா வாழ்த்து கூறினார் இது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு பெருந்தலைவர் காமராஜர் கழக நிறுவன தலைவர் கீழப்பாவூர் பி .கே. ஆர். அருணாச்சலம் கூறியதாவது கடந்த 20 ஆண்டுகளாக தொண்டு நிறுவனம் மூலம் ஏழை எளியவர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவிகளை செய்து வந்தேன் கோவில்களுக்கு இறைப்பணி செய்வதோடு நம் ஊரை சுத்தமாக வைத்திருக்கும் தூய்மை பணியாளர்களின் வாழ்க்கை தரம் உயர வேண்டும் என்றும் அவர்களுக்கு என்னாலன சிறு சிறு உதவிகளையும் வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியாது என்ற அளவில் விளம்பரம் இல்லாமல் செய்து வருகிறேன் நாளை நம் இந்தியாவின் சுதந்திர தினம் என்பதால் அதை மாணவ மாணவிகள் பள்ளிக்கு ஒரு நாள் விடுமுறை என்று நினைத்துக் கொள்ளாமல் சுதந்திரத்திற்காக நம் தேசத் தலைவர்கள் முன்னோர்கள் எப்படி பாடுபட்டார்கள் ஏன் சுதந்திரம் கிடைத்தது என்பதை இந்த பள்ளி குழந்தைகளின் சிறு வயதிலேயே அறிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் அனைத்து மாணவ மாணவிகளும் நாளை பள்ளிக்கு வரும்பொழுது கைகளில் சுதந்திரக் கொடியை ஏந்தி வர வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் தேசியக் கொடியை அளித்து இனிப்பு வழங்கினேன் என் மனம் திருமதிக்காக பள்ளி மாணவ மாணவிகள் மாற்றுத்திறனாளிகள் தூய்மை பணியாளர்கள் ஏழை தாய்மார்கள் ஆகியோரின் மனம் குளிர வேண்டும் என்பதே எனது லட்சியம் என் ஊரைச் சுற்றி உள்ள பகுதிகளில் தூய்மை பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கி வந்தேன் அது இன்று நகர் புறத்தில் பணி செய்யும் தூய்மை பணியாளர்களுக்கு அரசு காலை சிற்றுண்டியை இலவசமாக வழங்கப்படும் என அறிவிப்பு செய்தது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது நகராட்சி நிர்வாகம் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மதிய வேளைகளிலும் அந்த துப்புரபணியாளர்களுக்கு நன்கு சத்தான உணவு வழங்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள் இதை வெகு விரைவில் அரசு பரிசீலனை என்று செய்யும் நம்பிக்கையில் அனைவருக்கும் இனிய சுதந்திர திருநாள் நல்வாழ்த்துக்கள் என்று கூறினார்..




# செய்தி மக்கள் தொடர்புத்துறை வெளியிட்ட அறிக்கை

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2025 விளையாட்டுப் போட்டிகளுக்கான இணையதள முன்பதிவு (Online Registration) 14.07.2025 https://cmtrophy.sdal.in/https://sdal.tn.gov.i இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 10 இலட்சம் போட்டியாளர்கள் முன்பதிவு செய்துள்ளனர்.

முன்பதிவிற்கான கடைசி நாள் 16.08.2025 என அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை முன்பதிவில் கிடைக்கப்பெற்ற அமோக வரவேற்பினை தொடர்ந்து பொதுமக்கள், பள்ளி. கல்லூரி மாணாக்கர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என அனைத்து பிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க மற்றும் அனைத்து தரப்பு மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்கும் வகையில் இணையதள முன்பதிவு செய்திட கால அவகாசம் 20.08.2025 தேதி இரவு 8 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.



## சிங்கப்பூரில் நடைபெற்ற உலக அக்வாட்டிக்ஸ் மாஸ்டர் சாம்பியன்ஷிப் போட்டியில்

# பின்னோக்கிய கைவீச்சு நீச்சல் போட்டியில் தமிழக வீரர் வெண்கல பதக்கம் வென்று சாதனை

மீனம்பாக்கம் ஆக.15-

2025 ஆம் ஆண்டுக்கான உலக அக்வாட்டிக்ஸ் மாஸ்டர் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது

25 வயதுக்கு மேற்பட்ட நீச்சல் வீரர்களுக்கான உலகின் உயர்ந்த போட்டியான உலக அக் வாட்டிக்ஸ் மாஸ்டர் சாம்பியன்சிப் போட்டியில் சுமார் 100 நாடுகளில் இருந்து 6000 மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர்

இந்தியாவின் சார்பில் தமிழகத்தைச் சேர்ந்த தலைமை பயிற்சியாளர் அரவிந்த் நைனார் கலந்து கொண்டார் இவர் 200 மீட்டர் பின்னோக்கிய கைவைத்து நீக்கியது போட்டியில் வெண்கல பதக்கம் வென்றும் சாதனை புரிந்தார் இந்நிலையில் சிங்கப்பூரில் இருந்து விமான மூலம் சென்னை விமான நிலையம் வந்த அவருக்கு உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் உற்சாக வரவேற்பு அளித்தனர்/



■ இராமநாதபுரம் எம்.ஜி.திருமண மஹாலில் வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் மாவட்ட அளவிலான உயிர்ம வேளாண் கருத்தரங்கை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன் அவர்கள் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.பாஸ்கரமணியன் அவர்கள் உள்ளார்.

# ரூ.37.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள் 3, பாராவிளையாட்டு மைதானங்கள் 5, தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்






சென்னை ஆக.15-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் புதுக்கோட்டை, திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள்3, தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா விளையாட்டு மைதானங்கள், கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

திறந்து வைக்கப்பட்ட விளையாட்டுத் துறை கட்டடங்களின் விவரங்கள் 2023-24ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினை தூண்டும் வகையில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அதற்கு "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்" எனப் பெயரிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில், திருவரங்குளம் கிராமத்தில் 6.42 ஏக்கர் பரப்பளவில், 400 மீட்டர் தடகள பாதை (மண்), கால்பந்து மைதானம், கையுந்துபந்து ஆடுகளம், நீளம் தாண்டுதல் பகுதி, பார்வையாளர்களுக்கான இருக்கைகளுடன் கூடிய அரங்கம், உடற்பயிற்சி கூடம், உடை மாற்றும் அறை, நிர்வாக அலுவலகக் கட்டடம், கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயில் ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கம்; திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், நிம்மியம்பட்டு கிராமத்தில் 6.00 ஏக்கர் பரப்பளவில் 400 மீட்டர் தடகள பாதை (மண்), கால்பந்து மைதானம், கையுந்துபந்து ஆடுகளம், கூடைப்பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம், கோகோ ஆடுகளம், நீளம் தாண்டுதல் பகுதி, தடைகள் தாண்டும் ஓடுதளப்பாதை, பார்வையாளர்களுக்கான இருக்கைகளுடன் கூடிய அரங்கம், உடற்பயிற்சிக்கூடம், நிர்வாக அலுவலகக் கட்டடம், கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயில் ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கம்; திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில், சிவன்மலை கிராமத்தில் 6.56 ஏக்கர் பரப்பளவில் இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம், கையுந்துபந்து ஆடுகளம், கூடைப்பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம், உடற்பயிற்சிக்கூடம் மற்றும் நுழைவு வாயில் ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கம்;

தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் 20.46 ஏக்கர் பரப்பளவில் 400 மீட்டர் தடகள ஓடுபாதை (மண்) மற்றும் நீளம் தாண்டுதல், கையுந்துபந்து உள்விளையாட்டரங்கம், கபாடி ஆடுகளம் கொண்ட உள்விளையாட்டரங்கம், கூடைப்பந்து ஆடுகளம், கால்பந்து மைதானம், நவீன உடற்பயிற்சி கூடம், நிர்வாக அலுவலகக் கட்டடம், உணவகம், உடைமாற்றும் அறை, கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன்

15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட விளையாட்டு வளாகம்; சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்திலும் மற்றும் திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் பாரா விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், பாராவிளையாட்டு அரங்கம், அரைவட்ட திறந்தவெளி மேற்கூரை கொண்ட பாரா இறகுப்பந்து, உட்கார்ந்து விளையாடும் பாரா கையுந்துபந்து, பாரா டேபிள் டென்னிஸ், பாரா போச்சியா (Boccia), பாரா டேக்வொண்டோ, பாரா ஜூடோ ஆடுகளம், பாரா கோல்பால் (Goal ball) ஆகிய விளையாட்டுகளுக்கான பன்னோக்கு உள்விளையாட்டரங்கம், பாரா பளுதூக்குதல் அடங்கிய உடற்பயிற்சிக்கூடம், சக்கர நாற்காலிகளுடன் அணுகும் வகையிலான சாய்வுதளம் கொண்ட ஆண், பெண் இருபாலருக்கான கழிப்பறைகள் ஆகிய வசதிகளுடன் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா விளையாட்டு மைதானங்கள்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில், ஹாக்கி விளையாட்டு மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், நவீன பயிற்சி வசதிகளை உருவாக்கிடவும், 60 மாணவர்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய அறைகள், உணவு உண்ணும் அறை, சமையலறை, இருப்பு அறை, தொலைக்காட்சி கூடம், பார்வையாளர் ஓய்வறை, காப்பாளர் அறை, அலுவலக அறை, விளையாட்டு உபகரணங்கள் வைப்பதற்கான இருப்பு அறை, படிப்பதற்கான அறை மற்றும் பொழுதுபோக்கு அறை, ஆகிய வசதிகளுடன் தரை மற்றும் முதல் தளம் கொண்ட 20,369 சதுர அடி கட்டட பரப்பளவில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம்; என மொத்தம் 37 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள்,

5 பாராவிளையாட்டு மைதானங்கள், தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் கலந்துகொண்டனர்.



## சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்

சோழிங்கநல்லூர் ஆக.15-

சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டல அலுவலகத்தில் மாதாந்திர ஆலோசனை கூட்டம் (ஆகஸ்ட் 14) நடைபெற்ற கூட்டத்தில் மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான, வி .இ.மதியழகன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் தங்களின் கோரிக்கைகளை விரைந்து முடித்து தருமாறு மண்டலக்குழு தலைவரிடம் கேட்டபோது சென்னை மாநகராட்சி அலுவலர்களிடம் ஏன் பணிகளை விரைந்து முடிக்கவில்லை என்று கேள்வி கேட்டதற்கு மண்டல ஆணையர் பணிகள் விரைவில் முடித்து தருகிறோம் என்று உறுதியளித்தார். மழைக்காலங்களில் பொது மக்களுக்கு தேவையான வசதிகளை உடனடியாக பணிகளை விரைந்து முடிக்குமாறு மண்டல குழு தலைவர் ஆணையருக்கு ஆணையிட்டார். மண்டல கூட்ட அரங்கில் கலந்து கொண்ட மாமன்ற உறுப்பினர்கள், கோவிந்தசாமி ,ஏகாம்பரம் , சங்கர் ,முருகேசன், மேனகா சங்கர், அஸ்வினி கருணா, லியோ சுந்தரம் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் உதவி ஆணையாளர் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கம் பொதுக்குழு மற்றும் பணி நிறைவு பாராட்டு விழா திருப்பூர் மாவட்டம் மூலனூர் திலகம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அதில் மூலனூர் ஒன்றியத்தில் பதிமூன்று அரசு ஆரம்ப பள்ளி மதிய உணவு திட்டத்திற்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க உறுதுணையாகவும், பள்ளிகளுக்கு சரியான நேரத்தில் சிலிண்டர் வழங்குவதில் சிறந்த சேவையாற்றிக் கொண்டிருக்கும் Abinav Indane Gramin Vitrak பங்குதாரர் திரு செந்தில்குமார் தாராபுரம் நகர காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.



## தேவகோட்டை ராம்நகரில்
## ஸ்ரீ பாலமுருகன் கோவிலில் தேய்பிறை சஷ்டி முன்னிட்டு சிறப்பு அலங்கார அபிஷேகம்

தேவகோட்டை ஆக.15-

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ராம்நகரில் ஸ்ரீ பாலமுருகன் கோவில் உள்ளது. நேற்று தேய்பிறை சஷ்டி தினத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேக் ஆராதனைகள் நடைபெற்றது. முன்னதாக விநாயகரருக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். பின்னர் ஸ்ரீ பாலமுருகனுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், தேன்,பஞ்சாமிர்தம்,இளநீர்,பன்னீர்திருநீர், 11வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது.அபிஷேகங்களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர்.திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர்.

அபிஷேகங்கள் நடைபெற்றது.அபிஷேகங்களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர்.திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர்.





## தாம்பரத்தில் விடுபட்ட மற்றும் வர இயலாதவர்களுக்கு பட்டா வழங்கிய தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா

தாம்பரம் ஆக்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,021 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இதில் வர இயலாதவர்கள் மற்றும் விடுபட்ட தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் அகரம்தென் மற்றும் முடிச்சூர் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 327 பயனாளிகளுக்கு தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார் உடன் வட்டாட்சியர், அகரம்தென் ஊராட்சி மன்ற தலைவர் கே.ஜெகதீஸ்வரன், முடிச்சூர் ஊராட்சி முன்னாள் தலைவர் பா.தாமோதரன் மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் பயனாளிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை ரயில் நிலையத்தில் ரயில் முன் பாய்ந்து இளைஞர் தற்கொலை முயற்சி

சிவகங்கை ஆக.15-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் அருகே மேட்டுப்பட்டியை சேர்ந்த அருள் புஷ்பத்தின் மகன் இளைஞர் டேவிட் ஜான் பால்(33). இவர் சிவகங்கை ரயில் நிலையத்தில் 6.30 மணிக்கு ராமேஸ்வரத்திலிருந்து தாம்பரம் நோக்கி செல்லும் பயணிகள் ரயில் முன் பாய்ந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். இதனை அடுத்து ரயில் நிறுத்தப்பட்டு தீயணைக்கும் நிலையத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது. விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் ரயிலின் அடியில் சிக்கி இருந்த இளைஞர் டேவிட் ஜான் பாலை மீட்டனர். இந்த விபத்தில் அவரது கை துண்டான நிலையில் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தகவல் அறிந்து விரைந்து வந்த மானாமதுரை இருப்புப் பாதை காவல்துறையினர் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவத்தால் பயணிகள் ரயில் சுமார் அரை மணி நேரம் தாமதமாக சென்னை நோக்கி புறப்பட்டு சென்றது. இளைஞர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட சம்பவம் சிவகங்கை ரயில் நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சிவகங்கை மாவட்டம் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயனடைந்த முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து, மனம் நெகிழ நன்றி தெரிவித்தனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் நிதி நெருக்கடியினை சீர் செய்து, தொலைநோக்கு சிந்தனையுடன் நாளுக்கு நாள் புதிதாக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசின் திட்டப் பயன்கள் மற்றும் சேவைகள் அனைத்தும் மக்களைத் தேடி சென்று வழங்குவதற்கான சிறப்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக, செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகவும் திகழ்ந்து வருகிறது.

2 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டங்களால் தனி மனிதன் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கும் அவை அடிப்படையாக அமைகிறது. அதன்படி, பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சியில் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருவது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், அரசின் அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையில், ஒவ்வொரு துறை ரீதியாகவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அந்தவகையில், அடித்தட்டு மக்கள் பயன்பெறுகின்ற வகையிலும், கூட்டுறவுவே நாட்டுயர்வு என்ற அடிப்படையிலும் கூட்டுறவுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, தனிநபரின் பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவியாகவும், சமுதாயத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும், நலிவடைந்த பிரிவினருக்கு கைகொடுத்து தூக்கிவிடும் துறையாகவும் கூட்டுறவுத்துறை சிறந்து விளங்கி வருகிறது.

கூட்டுறவுத்துறையின் மூலம் பயிர்க்கடனுதவி, கால்நடை பராமரிப்பு கடனுதவி, நகைக்கடனுதவி, சுய உதவிக்குழு கடனுதவி, சிறு வணிக கடனுதவி, மகளிர் தொழில்முனைவோர் கடனுதவி, பணிபுரியும் மகளிர் கடனுதவி, ஆதரவற்ற பெண்களுக்கான கடனுதவி, மத்திய கால கடனுதவிகள், பண்ணை சாரா கடனுதவிகள், தானிய ஈட்டு கடனுதவிகள், டாப்செட்கோ கடனுதவிகள்,

3 டாம்கோ கடனுதவிகள், தாட்கோ கடனுதவிகள், வீட்டு வசதி கடனுதவிகள், வீட்டு அடமான கடனுதவிகள், வாகன கடனுதவிகள், நாட்டுப்புற கலைஞர்களுக்கான கடனுதவிகள், மாற்றுத்திறனாளி கடனுதவிகள், சம்பள கடனுதவிகள்,





நுகர்வோர் கடனுதவிகள், காலி வீட்டுமனை வாங்க கடனுதவிகள் மற்றும் இதர கடனுதவிகள் என மொத்தம் 34 வகையான கடனுதவிகள் கூட்டுறவுத்துறையின் மூலம் வழங்கப்பட்டு அனைத்து தரப்பு மக்களின் நலன் காக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தற்போது, உங்களுடன் ஸ்டாலின் மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற இரண்டு புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டு, பொதுமக்கள் வசிக்கும் பகுதியிலேயே அரசு நேரடியாக சென்று திட்டப் பயன்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழிவகை செய்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக 12.8.2025 அன்று கூட்டுறவுத்துறையின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில்,"முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" எனும் புதிய திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

4 இப்புதிய திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்திறனாளிகளும் என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கு சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 856 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை கொண்ட 33,294 குடும்ப அட்டைகளில் உள்ள 65,690 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கு சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5 இத்திட்டம் பிரதி மாதம் 2 வது சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் செயல்படுத்தப்பட்டு வயதான முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அத்தியாவசிய குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்திட அரசால் சிறப்பான




நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயனடைந்த முதிய தம்பதி திரு.முருகேசன் அவர்கள் மற்றும் திருமதி தவமணி அவர்கள் ஆகியோர் தெரிவிக்கையில்,

எங்களது பெயர் முருகேசன் மற்றும் தவமணி ஆகும். எங்களுக்கு முறையே 81 மற்றும் 72 வயதாகிறது. நாங்கள் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட டி.புதூர் பகுதியில் வசித்து வருகிறோம்.

நாங்கள் பையூர் பிள்ளைவயல்



தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டுப்பாட்டில் செயல்படும் டி.புதூர் நியாயவிலை கடையிலிருந்து குடிமைப் பொருட்களை பெற்று வந்தோம்.

6 எங்களது குடும்பத்தினர் வேலை நிமித்தமாக வெளியூரில் வசித்து வருகின்றனர். வயது முதிர்வின் காரணமாக நாங்கள் எனது அன்றாட வேலைகளை மேற்கொள்வதற்கே மிகவும் சிரமமடைந்து வந்தோம். எங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி வருவதற்கு பிறரை சார்ந்தே வாழ்ந்து வருகிறோம். குறிப்பாக, மாதந்தோறும் குடிமைப்பொருட்கள் பெறுவதற்கென நியாய விலைக்கடைக்கு செல்வதற்கும் மிகவும் சிரமமடைந்து வந்தோம்.

நாங்கள் தினமும் தியானம் மேற்கொள்ளும் பொழுது, நியாய விலைக்கடை அருகில் அமைய வேண்டும் என வேண்டிவந்தோம். அதற்கேற்றார் போலவே, முதியோர்களின் சிரமத்தை போக்குகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" எனும் புதிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக எங்களைப் போன்ற 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு, அவர்களது இல்லத்திலேயே குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது எங்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது.

இவ்வாறு, தொலைநோக்கு சிந்தனையுடன் சிந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதில், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டமானது மிகவும் சிறப்பாக உள்ளது. எங்களைப் போன்ற முதியோர்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிமைப் பொருட்களை இல்லத்திற்கே வந்து வழங்கி,

7 எங்களின் நலன் காத்து மனிதநேயத்துடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்லாண்டு அனைத்து வளமுடனும் வாழ வேண்டும் என வாழ்த்தி, எங்களது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறோம் என முதிய தம்பதியினர் தெரிவித்தனர்.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாற்றுத்திறனாளி பயனாளி திரு. நாகூர் பிச்சை அவர்கள் தெரிவிக்கையில், எனது பெயர் நாகூர் பிச்சை. நான் இளையான்குடி மைனர் தெருவில் வசித்து வருகிறேன். நான் மாற்றுத்திறனாளி என்பதால், எனது சில தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பிறரை சார்ந்திருத்தல் வேண்டும். அதில், ஒன்று நியாய விலைக்கடையிலிருந்து குடிமைப் பொருட்களை பெறுவதாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில், எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, எங்களின் நலன் காத்து வருகிறார்கள்.


8 அதில், தற்போது எங்களது தேவைகளில் ஒன்றான குடிமைப் பொருட்களை, எவ்வித சிரமுமின்றி எங்களது இல்லத்திற்கே நேரில், வாகனங்கள் மூலம் விநியோகம் செய்வதற்கும் "முதலமைச்சரின் தாயுமானவர்



திட்டம்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்து, வழிவகை செய்துள்ளார்கள். அதிலும், பிரதி மாதந்தோறும் இரண்டாவது சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் குடிமைப்பொருட்கள் கிடைக்கப்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதும் சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

குறிப்பாக, 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பிறரை சார்ந்தில்லாமல், தற்சார்பு நிலையில் இருந்திட வேண்டும் என மனிதநேயத்துடன் சிந்தித்து, "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" எனும் மகத்தான திட்டத்தினை அறிமுகப்படுத்தி, என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளின் நலன் காத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனநிறைவுடன் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என மாற்றுத்திறனாளி பயனாளி திரு. நாகூர் பிச்சை அவர்கள் தெரிவித்தார்.

தொகுப்பு :
மு.ராஜசெல்வன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.



## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.15-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பள்ளவிளை புனித செபஸ்தியார் ஆலய சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு பகுதி பொதுமக்களுக்கு பள்ளவிளை புனித செபஸ்தியார் ஆலய சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற முகாமினை பார்வையிட்டு, முகாமில் மருத்துவ முகாம் மற்றும் பல்வேறு அரசு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகள், கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட அரங்கம் ஆகியவற்றினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முகாம்களில் பெறப்படும் அனைத்து விண்ணபங்களிலும் உரிய ஆவணங்கள் இணைத்து இருப்பதை சரிபார்த்து வாங்க வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தகுதியான விண்ணப்பங்களுக்கு 45 தினங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும். பதில் கிடைக்க பெறாத பொதுமக்கள் தங்களை நாடி வந்து கேட்கும் போது தகுந்த பதில்களை அவர்களுக்கு வழங்குவதோடு, அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் மாநகர் நகர்நல அலுவலர் மரு.ஆல்பர் மதியரசு, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## தென்காசியில் ரூ 15 கோடி மதிப்பீட்டிலான மாவட்ட விளையாட்டு அரங்கம்... தமிழக முதல்வர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்

தென்காசி, ஆக.15

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்தவாறு வியாழக்கிழமை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் புதுக்கோட்டை, திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள், தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா விளையாட்டு மைதானங்கள், கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஹாக்கி விளையாட்டு மாணவர்களுக்கான முதன்மை நிலை மையம் ஆகியவற்றை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இது பற்றிய விவரம் ஆவது



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தென்காசி மாவட்டத்தில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் மாவட்ட விளையாட்டு அரங்கமானது அமைந்துள்ளது இவ் விளையாட்டு அரங்கில் நான் ஒரு மீட்டர் தடகள மைதானம் கால்பந்து மைதானம் கபடி உள் விளையாட்டு அரங்கம் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைந்துள்ளது தென்காசி மாவட்டத்தில் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக பள்ளி மாணவ மாணவிகள் கல்லூரி மாணவ மாணவிகள் அரசு ஊழியர்கள் பொதுமக்கள் மாற்றுத்திறனாளிகள் என அஞ்சு பிரிவுகளில் நடைபெற்று முதல் பரிசாக ரூபாய் 3000மும் இரண்டாம் பரிசாக ரூபாய் 2000 மூன்றாம் பரிசாக ரூபாய் ஆயிரமும் வழங்கப்படுகிற விற்கிறது அது மட்டுமன்றி ஆண்டு தோறும் மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா மாரத்தான் போட்டிகள் மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன தென்காசி மாவட்டத்தில் கால்பந்து கபாடி ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் தேசிய அளவில் பதக்கங்கள் வென்று வீரர் வீராங்கனைகள் சாதனை படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

தமிழக முதல்வர் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்ட மாவட்ட விளையாட்டு அரங்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ.கே .கமல் கிஷோர் இ.ஆ.ப. அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணிஸ்ரீ குமார் தலைமையில் குத்துவிளக்கேற்றி வைத்தார் இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட துணை ஆட்சியர் வைஷ்ணவி பால் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா பழனி நாடார் தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர் துணைத்தலைவர் கே.என்.எல் சுப்பையா தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் ஷேக் அப்துல்லாஹ் உட்பட மக்கள் பிரதிநிதிகள் மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## சுதந்திர தினத்தில் மது விற்றால் கடும் நடவடிக்கை: ஆட்சியர் எச்சரிக்கை

சென்னை: ஆக.15-

சென்னை மாவட்டத்தில் சுதந்திர தினத்தன்று மது விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்ட செய்திக்குறிப்பு: சுதந்திர தினம் இன்று (ஆக.15) கொண்டாடப்படுகிறது.



அன்று மது விற்பனை செய்யக் கூடாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகள் மற்றும் தமிழ்நாடு மதுபானம் விதிகள் ஆகியவற்றின் கீழ் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக், மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் பார்கள், உரிமம் பெற்ற கிளப் பார்கள், ஓட்டல் பார்கள் என அனைத்தும் ஆக.15ல் மூடப்பட வேண்டும்.

அறிவிப்பை மீறி மது விற்பனை செய்தால், மதுபானம் விற்பனை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறு அதில்தெரிவிக்கப் பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161